# யா/கோட்டைக்காடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை

## சுன்னாகம்

## பரிசளிப்பு விழா

## 2017

## அதிபரின் அறிக்கை

**05.12.2017**

# J/Koddaikkadu Government Tamil Mixed School

**Chunnakam**

## *PRIZE GIVING -2017*

## *Principal's Report*

## யா/கோட்டைக்காடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை

சுன்னாகம்

## மகுட வாசகம்

“இளமையிற்கல்”

## தூரநோக்கு-VISION

கல்வியின்மூலம் ஒற்றுமையானதும்
சமூகப்பற்றுள்ளதுமான சமுதாயத்தை
உருவாக்குவோம்

## பணிக்கூற்று-MISSION

எண்ணும் எழுத்தும் ஏற்றமிகு கலைகளும்
இணைப்பாடச் செயல்களும்
ஒழுக்கப்பண்புகளுடன் இணைத்துப்புகட்டி
மனிதநேயம்மிக்க ஒருமைப்பாடான சமுதாயத்தை
உருவாக்குவோம்

யா/கோட்டைக்காடு அ.த.க.பாடசாலை

# பரிசளிப்பு விழா - 2017

காலம் : 05.12.2017 செவ்வாய்க்கிழமை
நேரம் : பி.ப 1.30 மணி
இடம் : பாடசாலை மண்டபம்

**தலைவர்**

திரு.[illegible] (அதிபர்)

**ஆசியுரை**

சிவஸ்ரீ [illegible] சர்மா
(சாளம்பை முருகமூர்த்தி தேவஸ்தானம்,
கோட்டைக்காடு, மல்லாகம்)

**பிரதம விருந்தினர்**

திரு. த.மாதவன்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
உடுவில்)

**சிறப்பு விருந்தினர்**

திருமதி.லை.சச்சிதானந்தம்
(உப அதிபர், யா/மல்லாகம் மகாவித்தியாலயம்)

**கௌரவ விருந்தினர்கள்**

திரு.ச.சற்குணம்

திரு.S.கஜீபன்

திருமதி.மகேந்திரன் மகேஸ்வரி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பாடசாலைச் சமூகம்

# அதிபர் அறிக்கை

எப்போதும் எங்களுடன் துணையிருக்கும் அண்ணமகேஸ்வரனின் அருளையும் சாளம்பை முருகனின் அருட்கடாட்சத்தையும் வேண்டி இறைவனின் தாழ்பணிந்து இவ் அறிக்கையினை அளிக்கை செய்கின்றேன்.

இங்கு வந்து நல்லாசி கூறிய போற்றுதலுக்கும் வணக்கத்திற்குரிய சிவயதுகரசர்மா குருக்கள் ஐயா அவர்களே முதன்மைவிருந்தினர் அன்புக்கும் பெருமதிப்பிற்குரியஉடுவில் கோட்டக்கல்விப்பணிப்பாளர் திரு த. மாதவன் ஐயா அவர்களே சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பிக்கும் இப்பாடசாலையின் முன்னாள் அதிபரும் தற்போது மல்லாகம் மகாவித்தியாலய உதவி அதிபருமாகிய திருமதி வாசுகி சச்சிதானந்தம் அவர்களே மேலும் கௌரவ விருந்தினராக கலந்துகொண்டிருக்கும் இப்பாடசாலையின் உருவாக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் அயராது பாடுபட்ட தொடர்ந்தும் அப்பணியை மேற்கொண்டுவருகின்ற திரு S.சர்வதாஸ்,திருமதி மகாதேவன் மனோராணி, திரு S. சுஜிதர் அவர்களே பெற்றோர்களே, பழையமாணவர்களே,நலன்விரும்பிகளே எம் மாணவச் செல்வங்களே உங்கள் அனைவரிற்கும் வணக்கம் கூறி அன்புடன் வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.02.01.2017 அன்று பாடசாலையின் புதிய அதிபராக இப்பாடசாலையில் கடமைப் பொறுப்பேற்ற பின்னர் நடை பெறும் முதலாவது பரிசளிப்பு விழா இதுவாகும்.

இன்றைய பரிசளிப்பு விழா நன்நாளில் எங்களோடு முதன்மைவிருந்தினராக கலந்து சிறப்பிக்கும் எங்கள் பெருமதிப்பிற்குரிய உடுவில் கோட்டக்கல்விப்பணிப்பாளர் திரு த.மாதவன் அவர்கள் கல்வித்துறையில் நீண்டகாலம் அனுபவம் மிக்க ஒருவர் ஆசிரியராக அதிபராக

கோட்டக்கல்விப்பணிப்பாளராக பல்துறைப்பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கும் ஓர் சான்றோன் ஆவார்.

வெளிநாட்டுப்பயிற்சிகளும் பெற்று தன் ஆற்றல்களை விருத்தி செய்த ஓர் விற்பனராவார். நாம் எந்த விடயமாக அவரை அணுகும் போதும் முதலில் "இரு அதன்பின் கதை" என அன்போடும் பண்போடும் பழகும் மனிதப்பண்பு மிக்கவர் எதையும் இல்லை என்று சொல்லாமல் தன்னால் இயன்றவரை முழு ஒத்துழைப்பு தரக்கூடிய ஓர் நேர் மனப்பாங்குமிக்க மனிதர் அவர் இன்று முதன்மைவிருந்தினராக இருந்து இவ்விழாவை சிறப்பிப்பது எம்மையும் பாடசாலைச் சமூகத்தையும் பெருமகிழ்ச்சி கொள்ளச் செய்கின்றது இவரின் கரங்களால் எமது மாணவர்கள் பரிசில்களை பெறுவது எமக்கு கிடைத்த பாக்கியமாகவே நாம் கருதுகின்றோம்.

சிறப்புவிருந்தினராக வருகைதந்து எங்களை கௌரவப்படுத்தும் மதிப்பிற்குரிய இப்பாடசாலையின் முன்னாள் அதிபரும் தற்போது மல்லாகம் மகாவித்தியாலயத்தின் உபஅதிபராக கடமையாற்றும் திருமதி வாசுகி சச்சிதானந்தம் அவர்கள் எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு ஆசிரியராகவும்,அதிபராகவும் இருந்து பெரும் பணியாற்றியவர் நீண்ட சேவைக்கால அனுபவங்களை கொண்டவர்.எமது பாடசாலைச்சூழலை நன்கறிந்து வினைத்திறனான நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொண்டவர். இவர் வளர்த்தெடுத்த மாணவச் செல்வங்கள் பரிசு பெறும் இந்நாளில் சிறப்பு விருந்தினராக வருகை தந்து விழாவில் கலந்து பரிசில்கள் வழங்குவதையிட்டு நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

விழாவின் கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் திருச.சர்வதாஸ்,திரு S.சுஜிதர்

, திருமதி மகாதேவன் மனோராணி அவர்கள் இச்சமூகத்தால் மதிக்கப்படுகின்ற அரும்பணிகளை ஆற்றுபவர்கள் இப்பாடசாலையின் வளர்ச்சி பற்றி கருதும்போது இவ்மூவரின் பங்களிப்பும் காத்திரமானதும் கௌரவிக்கப்பட வேண்டியதுமாகும் பல்வேறுவிதமான உதவிகளை அவர்கள் எமது மாணவச் செல்வங்களிற்கு பெற்றுக்கொடுத்துள்ளார்கள். தொடர்ந்தும் அவ்வாறே செயற்பட்டு வருகின்றனர் அவர்கள் இப்பரிசளிப்புவிழாவில் கலந்த சிறப்பிப்பதால் நாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

அத்தோடு இங்கு வருகைதந்து எங்களை கௌரவப்படுத்தியுள்ள எல்லோரும் நன்றிக்குரியவர்கள் உங்கள் ஒவ்வொருவரினதும் வருகையாலும் நாம் பெருமகிழ்வுறுவதோடு உங்களின்சேவைகள்,உதவிகள் என்றைக்கும் எமது பாடசாலையை வளப்படுத்தும் என்பதை கூறிக்கொள்கின்றேன்.

இன்றைய பரிசளிப்புவிழாவில் 2017ம் வருட நடப்பு கல்வியாண்டில் பாடரீதியாக தவணைப்பரீட்சைகளில் முதன்மை பெற்ற மாணவர்களும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும் குடும்பமட்ட போட்டிகளிலும் ,இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் சாதனைபடைத்த மாணவர்களும் பரிசில்களைப் பெறுகிறார்கள் இவர்களிற்கு எமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு ஏனைய மாணவர்களும் எதிர்காலத்தில் சிறந்த பெறுபேறுகளுடன் பரிசில்களையும் பாராட்டுக்களையும் பெறுவதற்கு ஊக்கம் பெறவேணடும் எனவும் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்தவருடம் தரம் 5 புலமைப்பரிசில்பரீட்சையில் தோற்றிய 9 மாணவர்களில் செல்வி க.வைஸ்ணவி 169 புள்ளியை வெட்டுப்புள்ளிக்குமேல் பெற்று

சித்தியடைந்துள்ளார். மேலும் ஜெ.கஸ்தூரி 151 புள்ளி, பா.தர்ஜுன் 143 புள்ளி, மோ.மிதுஷன் 137 புள்ளி, பி.லிஸ்மியா 116 புள்ளி ஆகியோர் 100 புள்ளிகளிற்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர். மாணவர்களிற்கு அர்ப்பணிப்பாக சேவையாற்றி இப்பெறுபேறுகளிற்கு காரணமாய் அமைந்த வகுப்பாசிரியர் செல்வி க. சுஜிதா அவர்களையும் ஏனைய ஆரம்பக்கல்வி ஆசிரியர்களையும் இவ்வேளையில் நன்றியுடன் பாராட்டி மகிழ்கின்றேன்.

குடும்பமட்ட போட்டிகளில் பங்குபற்றி தமதுதிறமைகளை வெளிக்காட்டிய மாணவர்களை பாராட்டுவதோடு இவர்களிற்கான அனைத்து வழிப்படுத்தல்கள் ஏற்பாடுகளை செய்துதவிய எமது பாடசாலையின் உதவிஅதிபர் திருமதி இருதயநாதன் மிரியம்கொன்செப்ரா அவர்களையும் திருக்குறள் மனனப்போட்டிபோன்றவற்றில் கோட்டமட்ட போட்டிவரை மாணவர்களை வழிநடத்தி வெற்றிபெறச்செய்த திருமதி ஜெயந்தி கோபால கிருஸ்ணன் அவர்களையும் பாராட்டி மகிழ்கின்றேன்.

மேலும் இந்தவருடம் இடமாற்றம் பெற்று எமது பாடசாலை ஆசிரிய ஆளணியுடன் இணைந்த திருமதி பவானி சசிரஞ்சன் அவர்களின் வழிப்படுத்தல்களிற்காகவும் அவரிற்கு பாராட்டைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாணவர்களிற்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கி அவர்களின் ஆளுமைகளை வெளிப்படுத்த உதவிய குறிப்பாக சமய விழாக்களில் மாணவர்களை வழிப்படுத்திய இப்பாடசாலையில் தொண்டராசிரியராக கடமையாற்றும் செல்வி இ. ராஜி அவர்களிற்குநன்றியுடன் எனது பாராட்டைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த வருடம் எமது பாடசாலையில் பொங்கல்விழா , கால்கோள்விழா ,விளையாட்டுப்போட்டி,ஆசிரியர்தினம்

,நவராத்திரிவிழா என்பன நடைபெற்றதோடு இன்றைய பரிசளிப்பவிழா எமது மாணவர்கள் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழையமாணவர்கள், நலன்விரும்பிகளினது பங்குபற்றலுடன் நடைபெறுகின்றது. இவ்விழாக்களில் பங்குபற்றிய மாணவர்கள் ஆசிரியர்களையும் ,உதவிகள் ஒத்தாசைகளை வழங்கிய நலன் விரும்பிகளையும் பாராட்டிக் கொள்கின்றேன்.

எமது பாடசாலையில் மாணவர்மன்றச் செயற்பாடுகள் தொடர்ச்சியாக நடைபெறறு வருகின்றது இம்மன்றங்களினூடாக மாணவர்களின் ஆளுமைகள் வெளிப்படுத்தப்படுகின்றன இவ் மன்றச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளும் செயல் வல்லமை மிக்க மாணவர்களிற்கும் அதன் பொறுப்பாசிரியரிற்கும் இவ்வேளையில் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் பாடசாலையின் எல்லா அபிவிருத்திச் செயற்பாடுகளிலும் எமது தோளோடு தோள் நிற்கும் பாடசாலை அபிவிருத்திச்சபை உறுப்பினர்களையும் குறிப்பாக அதன் செயலாளர் திருமதி பாஸ்கரன் கமலேஸ்வரி அவர்களும் மிகுந்த பாராட்டுக்குரியவர்கள்.

எமது பாடசாலையில் ஒருசில மாதங்களே சேவைஅடிப்படையில் கற்றல்கற்பித்தல் செயற்பாடுகளிற்குகுறிப்பாக நூலக அபிவிருத்தியில் உதவிபுரிந்த இப் பாடசாலையின் பழையமாணவி செல்வி S.தனுஜா அவர்களிற்கும் இவ்வேளையில் பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

## பாடசாலையின் இவ்வருட அபிவிருத்திச் செயற்பாடுகள்

1. எமது பாடசாலைக்கு கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் ஊடாக புதிய மலசலகூடத்தொகுதி ஒன்று (ஆண்,பெண்) அமைப்பதற்கான அனுமதி கிடைத்து அவ்வேலைகள் நடைபெற்று வருகின்றன. பாடசாலையில் இடவசதி போதாதநிலையில் ஏற்கனவே பயனபாடற்ற பொருத்தமற்ற பழைய சலகூடத்தொகுதி வலயக்கல்வி அலுவலகத்தின் அனுமதி பெற்று உடைக்கப்பட்டு அவ்விடத்திலேயே புதிய மலசலகூடத்தொகுதி அமைக்கப்பட்டு வருகின்றது.

2. தரம் 2, தரம் 3 வகுப்பறைகள் வர்ணம் தீட்டி அழகுபடுத்தப்பட்டது.

3. எமது பாடசாலையின் சுவர்களில் படங்கள் வாசகங்கள் எழுதப்படும் செயற்பாடுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

4. பாடசாலையின் இந்தவருட விளையாட்டுப்போட்டியில் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்ட மாகாணசபை உறுப்பினர் கௌரவ திரு பா.கஜதீபன் அவர்களின் நிதிஒதுக்கீட்டில் பாடசாலைக்கு ஓர் பல்லூடக எறியி (Multi media projector) கிடைக்கப்பெற்றது. இதற்காக அவரிற்கு பாடசாலைச்சமூகம் சார்பான நன்றியறிதலை இவ்வேளையில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

4. சுவிஸில் வாழும் S-[illegible] குடும்பத்தினரின் பிறந்தநாள் அன்பளிப்பாக மாணவர்களிற்கு கற்றல் கற்பித்தல் சாதனங்கள் வழங்கப்பட்டன.

5. சர்வதாஸ்,சர்வராஜா,சர்வகுமார் ஆகியோரின் நிதிப்பங்களிப்புடன் பரிசளிப்பு விழா நிகழ்வுகள் நடை பெறுகின்றன.

6. புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்குமேல் 169 புள்ளிகளைப் பெற்ற சாதனை மாணவிக்கான துவிச்சக்கரவண்டி திரு,திருமதி நகுலாம்பிகை சுந்தரலிங்கம் குடும்ப உறுப்பினர்களால் வழங்கப்படுகிறது.

7. ஒலி,ஒளி அமைப்பு சோடனை உதவிகள் சு.சுஜிதர் அவர்களால் வழங்கப்படுகிறது

## எமது தேவைகள்

1. தற்போது அலுவலகம் ,நூலகம் வகுப்பறைகளாக பயன்படுத்தப்படும் புதிய கட்டடம் மேல்மாடிமண்டபம் கட்டப்படாமல் குறையாகக் காணப்படுகிறது. மழைநீர் மேலே தேங்கி நின்று கசிந்து ஒழுகுகின்றது இந்நிலை தொடர்ந்து நீடிக்குமானால் புதிய கட்டடம் வெகுவிரைவில் பழுதடைந்துவிடும். எனவே மேலே ஒன்றுகூடல் மண்டபம் ஒன்று அமைக்கப்படுதல் அவசியமானதும் அவசரமானதுமொன்றாகும்.

2. பாடசாலைக்கான விளையாட்டு முற்றம் அவசியமான தொன்றாகும்.தற்போது அதற்கு இடவசதி போதாமல் உள்ளது பாடசாலையின் அருகில் உள்ள காணிஉரிமையாளர்களினதும் நலன்விரும்பிகளினதும் ஒத்துழைப்புடன் பாடசாலைக்கான நீண்டகால இத்தேவையை பூர்த்தி செய்யமுடியும் என்பது எனது எதிர்பார்ப்பாகும்.

3. மாணவர்களிற்கான விளையாட்டு உபகரணத்தொகுதி அவசியத்தேவையொன்றாக காணப்படுகிறது.

4. 21ம் நூற்றாண்டின் கல்விச்சவால்களை வெற்றிகொள்ளவும் பாடசாலைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை வினைத்திறனாக முன்னெடுக்கவும் எமக்கு ஆகக்குறைந்தது 2 கணணியும் 1 printer ம் அவசியத்தேவையாகும்.

5. பாடசாலை பாண்ட் வாத்திய அணியினரிற்கு புதிய சீருடைத்துணி அவசியத்தேவையாகும்.

## நிறைவுரை

இன்றைய பரிசளிப்பு விழாவிற்கு வருகை தந்து எம்மையெல்லாம் சிறப்பித்துக்கொண்டிருக்கின்ற விருந்தினர்கள் மற்றும் அனைவரிற்கும் விழாவிற்கான உதவிகளை பலவழிகளிலும் புரிந்த பாடசாலை ஆசிரியர்கள்,மாணவர்கள்,பெற்றோர்கள்,பழையமாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள் விழாவின் அனுசரணையாளர்கள் அனைவரிற்கும் என்றென்றும் கனிவான நன்றிகளைக்கூறி நிறைவுசெய்கின்றேன் .

அதிபர்

## பரிசில்கள் பெறும் மாணவர் விபரம்

### தரம் 1

| பெயர் | பாடம் /விடயம் |
|---|---|
| இ. டினுசன் | கணிதம்,சுற்றாடல்,சமயம், திருக்குறள்மனனம் குடும்பமட்டப் போட்டியில் இரண்டாமிடம் |

| | |
|---|---|
| க. தற்சங்கவன் | தமிழ் ,பாடசாலை வரவு, குடும்பமட்டப் போட்டியில் சித்திரம் முதலாமிடம் |
| ஜெ. கரீஸ் | தலைமைத்துவப்பண்பு |
| கி. பவிஷா | அழகியல் செயற்பாடு |
| தீ. தீபனா | இலவசப்பாடநூலை முறையாக பேணல் |
| ஜெ. நிம்சிகா | சுத்தம்பேணல் |
| ச. தனுஸ்கா | ஆக்கம் |

## தரம் 2

| பெயர் | பாடம் /விடயம் |
|---|---|
| லி.சாருஜன் | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம்,வரவு,சுத்தம் |
| அ.டயந்தன் | தலைமைத்துவப்பண்பு |
| தீ.சஞ்ஜை | இலவசப்பாடநூலை முறையாக பேணல் |
| சி.கிஷானி | சித்திரம் |
| ஜெ.றித்தீஸ் | நேரந்தவறாமை |
| ஜீ.சுமிலன் | அழகியற்செயற்பாடுகள் |

## தரம் 3

| பெயர் | பாடம் / விடயம் |
|---|---|
| த.சபினஜா | தமிழ்,சமயம்,சுற்றாடல்,ஒழுக்கம் |
| மோ.கரீஸ் | கணிதம்,ஆக்கம்,சுயசுத்தம், இலவசப்பாடநூலை முறையாக பேணல் |
| ஜெ.சாகிதா | தலைமைத்துவப்பண்பு |
| ச.கிருத்திசன் | ஆக்கம் |
| வா.விதுர்சிகா | வரவு |

## தரம் 4

| பெயர் | பாடம் /விடயம் |
|---|---|
| தி.அபிநாஸ் | தமிழ்,கணிதம்,வரவு,ஒழுக்கம், சுயசுத்தம் |
| ந.நல்வேந்தன் | இலவசப்பாடநூலை முறையாக பேணல்,பாடசாலைச்சுத்தம் |
| ப.குபேரன் | சமயம்,சுற்றாடல் |
| பா.சஞ்சை | அழகியல் செயற்பாடு |
| ஜெ.சுஜீபன் | ஆக்கச்செயற்பாடு |
| ச.மதீஷன் | தலைமைத்துவம் |
| உ.லோகேஸ்குமார் | பாடசாலைச்சுத்தம் |

## தரம் 5

**2017 புலமைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிக்குமேல் பெற்றவர்கள்**

| **பெயர்** | **புள்ளி** |
|---|---|
| க.வைஸ்ணவி | 169 – வெட்டுப்புள்ளிக்குமேல் |
| ஜெ.கஸ்தூரி | 151 |
| பா.தர்ஜுன் | 143 |
| மோ.மிதுஷன் | 137 |
| பி.லிஸ்மியா | 116 |
| சு. ஜரேன் | 80 |

| **பெயர்** | **விடயம்/பாடம்** |
|---|---|
| த.தாரகன் | தலைமைத்துவம் |
| ஜெ. கஸ்தூரி | இலவசப்பாடநூலை முறையாகப்பேணல் |
| ச.திசோன் | ஒழுக்கம்,சுயசுத்தம் |
| பா.தர்ஜுன் | வரவு |
| கே.நவீசன் | ஆக்கம் |
| க.வைஸ்ணவி | தமிழ்,சமயம்,கணிதம்,சுற்றாடல் |